# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 73 — 1973 අගෝස්තු 17 වැනි සිකුරාදා — 1973.08.17

73 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒகத்து மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் — வெற்றிடம் ... ... ... | 825 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 839 |


*கவனிக்க.—விலங்கின அறுவை மருத்துவர், மருத்துவத் தொழிலர் ஆகியோர் பற்றிய (திருத்தம்) சட்டமூலமும் கடன் இணக்கம் (திருத்தம்) சட்டமூலமும் புகையிலை வரி (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## பதவிகள் — வெற்றிடம்

**இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்**

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

**1 : 1** விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**1 : 2** ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

**1 : 3** விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

**2 : 1** அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

**2 : 2** மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

---

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

**3 : 1** நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

**3 : 2** அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

**3 : 3** அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

**4 : 1** நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

**4 : 1 : 1** சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

**4 : 1 : 2** அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

**4 : 1 : 3** சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெறுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**4 : 1 : 4** தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமான வேற்றப்படும். [illegible] சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

**4 : 1 : 5** தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

**4 : 1 : 6** சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப் படமாட்டா.

**4 : 1 : 7** அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

**4 : 1 : 8** தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

**5 : 1** அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

**5 : 2** 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவோர். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

**6 : 1** ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், [illegible]

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 : 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும் ; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

*சௌக்கிய அமைச்சு*

*சௌக்கியத் திணைக்கள உத்தியோகத்தர்களிடமிருந்து சௌக்கியப் பிரதிப் பணிப்பாளர் (வைத்திய சேவைகள்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*விண்ணப்பங்கள் சௌக்கிய அமைச்சுச் செயலாளரை 1973 செப்தெம்பர் 4 ஆந் திகதிக்கு முன்னர் சேருமாறு அனுப்பப்படல் வேண்டும்.*

*மேலதிக விபரங்களுக்கு இதன்கீழ் ஒப்பமிட்டிருப்பவரோடு தொடர்புகொள்ளவும். கடிதத் தொடர்புகள் இதன் கீழ் ஒப்பமிட்டிருப்பவரின் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படக்கூடாது.*

*ஜி. அமரசேன,*
*பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),*
*சௌக்கிய அமைச்சுச் செயலாளருக்காக.*

*சௌக்கிய அமைச்சு,*
*காளிமுகச் செயலகம்,*
*கொழும்பு 1, 2 ஆகஸ்ட், 1973.*

*8-606—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73*

---

***இரத்தினபுரி மாவட்டத்தில் பிபிலகம பிரிவிற்கு பிறப்பு இறப்பும் அட்டகல்லன் கோறளை பிரிவிற்கு விவாக (பொது கண்டியர்) பதிவாளர் பதவி***

*பிபிலகம பிறப்பு இறப்பு பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இரு பாலரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.*

*2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்களும்; நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும், இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.*

*3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.*

*எஸ். ஜி. சமரசிங்க,*
*பெரும் பகுதிப் பதிவுகாரர்.*

*பதிவாளர் அலுவலகம்,*
*இரத்தினபுரி மாவட்டம்,*
*1973 ம் ஆண்டு ஜூலை மீ 25 ம் உ.*

*8-605—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73*

---

***உதவி வானூர்திப் பரிசோதகர் பதவி, தரம் I***
***சிவில் வான்செலவுத் திணைக்களம்***

*சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் உதவி வானூர்திப் பரிசோதகர் பதவி தரம் I க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், போக்குவரத்து அமைச்சு, செயலகம், கொழும்பு-1 எனும் முகவரிக்குப் பின்வரும் தேதிகளினன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளரைச் சென்றடையத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவி வானூர்திப் பரிசோதகர் தரம் I" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.*

*(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் :—1973, செப்தம்பர் 28 ஆந் தேதி.*

*(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் :—1973, ஒக்டோபர் 10 ஆந் தேதி.*

*குறிப்புகள்.—(1) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனும் குற்றச் சாட்டுக்கள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வயது பொருந்திருப்பவர்கள் [illegible] இடருக்குத் [illegible]*

(2) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற் குரிய அல்லது அந்நிய நாட்டிற்கு மிக அருகாமையிலுள்ள இலங்கை பிரதிநிதியின் அலுவலகத்திற்கு போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு ஒப்படைக்க லாம்.

(3) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கைக் குடியரசு உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுள்ளவர்களாக இருக்கி றார்களா என்பதனை உறுதிப்படுத்துவதற்கான மருத்துவச் சோதனை செய்யும் பொருட்டு, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்த கைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும் இலங்கைக் குப் பயணம் செய்வதற்காகிய செலவையும் சம்பந்தப்பட்ட உத் தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் மூன்று வருட காலத் தகுதிகாண் அடிப்படையிலே வைத்திருக் கப்படுவார். அத்துடன் அரசாங்க சேவை சகாய நிதிக்கு இவர் உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

குறிப்பு.—(1) தெரிவு செய்யப்பட்ட நபர் 1971.12.31 ஆந் தேதி யன்று அரசாங்கத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவியை வகிப்பவராயின், புதிய பதவியில் தொடர்ந்து இளைப் பாற்றுச் சம்பள உரிமைகளை அனுபவிக்க அவர் உரித்துடையவ ராவர்.

(2) தெரிவு செய்யப்பட்ட நபர் நிரந்தரமானதும் இளைப்பாற் றுச் சம்பளத்துக்குரியதுமான பதவியை வகிக்கும் அரசாங்க சேவையாளராக இருப்பின் அவர் புதிய பதவியில் குறிப்பிட்ட வோர் காலப் பகுதிக்கு பதிற் கடமையாற்ற நியமிக்கப்படுவார்.

3. **சம்பளமும் படிகளும்.**—பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின் வருமாறு :—

திரட்டிய சம்பளம்.—வருடத்திற்கு ரூபா 7,800 இல் ஆரம்ப மாகி ரூபா 360 கொண்ட 3 வருடாந்த ஏற்றங்களால் ரூபா 8,800 வரை உயரும். அதன் பின்னர் வினைத்திறமை காண் தடைப்பரீட் சையில் உத்தியோகத்தர் சித்தியடையும் பட்சத்தில், வருடத் திற்கு ரூபா 9,600 இல் ஆரம்பமாகி ரூபா 360 கொண்ட 4 வரு டாந்த ஏற்றங்களாலும் ரூபா 480 கொண்ட 5 வருடாந்த ஏற்றங் களாலும் ரூபா 13,440 வரை உயர்கின்ற சம்பள அடிப்படையில் வைத்திருக்கப்படுவார்.

1969.10.01 க்கு முன்னர் இருந்த அடிப்படைச் சம்பள அள வுத் திட்டம்—ரூபா 5,160—3 × 360—6,240/6,960—4 × 360, 5 × 480— ரூபா 10,800.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நல முடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973, ஒக்டோபர் 10 ஆந் தேதி இல் 23 வயதிற்குட்படா மலும் 40 வயதிற்கு மேற் படாமலுமிருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக் கட்டுப்பாடு வேறுபாடு யின்றிக் கவனிக்கப்படும்.

(இ) இலங்கைக் கல்விப் பொதுத் தராதர பத்திர பரீட்சை யில் (சாதாரண தரம்) இரண்டு தடவைகளுக்கு மேற் படாது தோற்றி சிங்களம், தமிழ், தூயகணிதம், பௌதி கம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும் ; அல்லது

சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் தூயகணிதம், பௌதிகம் ஆகிய பாடங்கள் உட்பட சித்தி யடைந்திருத்தல் வேண்டும் ; அல்லது

சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ; அத்துடன்

(ஈ) வானூர்தி இயந்திரங்களின் பராமரிப்பில் குறைந்தது 5 வருட அனுபவமிருத்தல் வேண்டும்.

(உ) "அ" பகுதியில் குறிப்பிட்டதும் 30,000 இருத்தல் முழு நிறை கொண்டதுமான வானூர்திக்கும் "இ" வகுதியில் குறிப்பிடப்பட்ட மட்டு மீறிய நிரப்பீடு கொண்ட வானூர்தி இயந்திரங்களுக்குமான நடப்பு வருடத்து வானூர்தி பொறியியலாளர் அனுமதிப் பத்திரம் வைத் திருத்தல் வேண்டும் அல்லது விமானப் பரிசோதகராக 8 வருட அனுபவம்,

(ஊ) சகல விதமான வானூர்திகளினதும் இயந்திரங்களினதும் அவற்றின் துணைக் கருவிகள், உபகரணங்கள் பற்றியது மான தெளிவான அறிவு.

(எ) வானூர்திகள் போக்குவரத்துக்கேற்றனவா என்பது பற் றியும் பரிசோதனைக்கான தேவைகள் தொடர்பான நடை முறைகள், செயல் முறைகள் பற்றியுமான தெளிவான அறிவு.

குறிப்பு.—(1) தகுந்த அபேட்சகர்கள் நியமனத்திற்குக் கிடைக் கப் பெறுவிடின் பின்வரும் தகைமைகளையுடைய அபேட்சகர்கள் உதவி வானூர்திப் பரிசோதகர் தரம் I—பயிற்சி நிலை ஆகச் சேர்க் கப்பட்டு அரசாங்கத்தின் செலவில் பயிற்சிக்காக வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவர். பயிற்சியின் முடிவில் உதவி வானூர்திப் பரி சோதகர் தரம் I ஆக நியமிக்கப்படுவர்.

(2) உதவி வானூர்திப் பரிசோதகர் தரம் I—பயிற்சி நிலை—இன் நியமனத்திற்காக வேண்டப்படும் தகைமைகள்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் மின்சார எந் திரவியலில் பட்டக் கல்விப் பட்டம், அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் தகுதிகாண் தேர் வுப் பரீட்சைப் பத்திரம் (டிப்பிளோமா)

(இ) கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் சான்றிதழ்களுடன் (மின்சாரம்) வானூர்தி அல்லது மின்சார பொறியியல் நிறுவனத்தில் உதவி முகாமையாளர் தரத்திற்குக் குறை யாத 5 வருட அனுபவம்.

(3) ஒன்றுவிட்டொன்றான வகுதிகளின் கீழ் (அ), (ஆ) அபேட் சகர்கள் கிடைக்காத பட்சத்தில் மட்டுமே ஒன்றுவிட்டொன்றான வகுதியில் (இ) கீழுள்ள உத்தியோகத்தர்கள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவர்.

(4) மேலே உள்ள (அ) (ஆ) என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் நியமனத்திற்கான தகைமை பெறுவோர் பதவிக்காக அங்கீகரிக் கப்பட்ட சம்பள அடிப்படையிலேயே நியமிக்கப்படுவர். ஆனால் வெளிநாட்டில் பயிற்சியை முடித்துக்கொண்டாலன்றி, வருடத் திற்கு ரூபா 9,600 க்கு முன்னர் தகுதிகாண் தடைக்கப்பால் தொடர முடியாது.

(5) மேலே (இ) இன் ஏற்பாடுகளின் கீழ் நியமனத்திற்காகத் தகைமை பெறுவோர் பயிற்சிக் காலத்தில் வருடாந்தம் ரூபா 6,720/- 2 × 360—ரூபா 7,440 எனும் சம்பள அடிப்படையில் நிய மிக்கப்படுவர். பயிற்சியின் முடிவில் பதவிக்காக அங்கீகரிக்கப் பட்டுள்ள சம்பள அடிப்படையில் அவர்கள் வைத்திருக்கப் படுவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கியம்**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாட சாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப் பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிட மிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற் சான்றிதழ்/அல்லது தொழினுட்பத் தகை மைகள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை.

குறிப்புகள்.—(1) சாதனங்களோ அல்லது சாதனங்களின் பிரதி களோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படலாகாது.

(2) சாதனங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு வேண் டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக் கள அல்லது கூட்டுத்தாபன தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தம் விண்ணப்பம் அனுப்பிய திக தியை போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு நேராக அறி வித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதி யன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளரை அடையக்கூடிய தாக இருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், போக்குவரத்து அமைச்சு, என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இவ்வமைச்சிலுள்ள எவ் வுத்தியோகத்தர்க்காயினும் நேராக அனுப்புதலாகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பாகம், பிரிவு (11அ) இல் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

9. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். முடிவு தேதிக்குந் மூன்று வாரங்களுக்குள் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை பற்றிய அறிவித்தலைக் கிடைக்கப் பெறுதோர் போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டிற்கிணங்கத் தவறும் விண்ணப்பதாரரது கோரிக்கையெவையும் கவனிக்கப்படமாட்டா.

கே. சி. எப். விஜயவிக்கிரம,
செயலாளர்,
போக்குவரத்து அமைச்சு.

போக்குவரத்து அமைச்சின் காரியாலயம்,
செயலகம்,
கொழும்பு—1.
1973, ஜூலை 26 ஆந் தேதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

சிவில் வான் செலவுத் திணைக்களம்

**உதவி வானூர்திப் பரிசோதகர், தரம் I க்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :———.

2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏதேனும் மாற்றமேற்படும் பட்சத்தில் உடனே தெரிவிக்கப்படல் வேண்டும்.)

3 அ. பிறந்த தேதி :————.
வருடம்———, மாதங்கள்————, திகதி———.

ஆ. 1973 ஒக்டோபர் 10 ஆந் தேதியன்று சரியான வயது :—
வருடம்———, மாதங்கள்———, தேதி———.

4. நாங்கள் இலங்கைப் பிரஜையா? வம்சாவழி மூலமாகவா அல்லது பதிவு மூலமாகவா என்பதனை அறியத் தரவும். பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் குடியுரிமைச் சான்றிதழின் குறிப்பெண்ணையும் வழங்கப்பட்ட தேதியையும் குறிப்பிடுக :————.

5. பிறந்த இடம் :————.

அ. விண்ணப்பதாரர் :————.

ஆ. விண்ணப்பதாரரின் தகப்பனார் :————.

இ. விண்ணப்பதாரரின் பாட்டனார் :————.

ஈ. விண்ணப்பதாரரது பூட்டனார் :————.

விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையிற் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்.

6. அ. பால் :————.

ஆ. மணமானவரா, தனியாளரா, விதவையா அன்றி தாரமிழந்தவரா என்பதை அறியத் தரவும் :————.

7. சித்தியடைந்த உயர்ந்த பரீட்சை :————.

1. சிங்களம் :————.

2. தமிழ் :————.

3. ஆங்கிலம் :————.

8. 12 வயதிலிருந்து சென்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :————.

| பொதுக்கல்வி | | | உயர்தொழில் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிறுவனம் | தொடக்கம் | வரை |
| 1. | | | | | |
| 2. | | | | | |

9. விளையாட்டு துறையில் பெற்ற திறமைகள். அத்துறையில் நீர் வகித்த பொறுப்பு வாய்ந்த பதவிகள் என்பன பற்றிய விபரங்கள் :————.

10 நீர்கடன் தொல்லைகளிலிருந்து விடுபட்டுள்ளீரா? அல்லாவிடின் கடன்களின் தொகை என்ன? :————.

11. எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவியல் சட்டத்தின்கீழ் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறெனின், தேதிகள், நீதிமன்ற வழக்கு இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு முழு விபரங்களைத் தருக :————.

12. கல்வி சார், தொழில் சார், தொழினுட்பத் தகைமைகள். (பெற்றுக்கொள்ளப்பட்ட சகல பட்டங்கள், விசேட தத்துவங்கள் தொழில்சார் தொழினுட்பத் தகைமைகள் என்பவற்றைத் தேதி, சித்தியடைந்த வகுப்பு என்பவற்றின் விபரங்களையும் எடுத்துக்கொண்ட பாடங்கள் நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றையும் அறியத் தருக :————.

13. தற்போதைய தொழிலும் முன்னைய நியமனங்களும், ஏதாவது இருப்பின் :————.
(அப்பதவிகளில் சேர்ந்த தேதிகளும் விலகிய தேதிகளும் இறுதியாகப் பெற்ற வருடாந்தச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்.)

முக்கியம்.—அரசாங்க சேவையிலிருந்து விலகியிருப்பின், அதற்கான காரணம் 15 ஆம் பந்தியின் கீழ் காட்டப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள் :————.
(அறிவித்தலிற் குறிப்பிட்டுள்ளபடி விசேட தகைமைகள்/அனுபவம் உள்ளனவா? அவ்வாறெனின் அவற்றின் விபரங்களைத் தருக.) வர்த்தமானி அறிவித்தலில் விசேட தேவைகள் ஏதாவது காட்டப்பட்டுள்ளதெனில் அவற்றைப் பார்க்க

15. ஏனைய விபரங்கள் :————.

16. இவ்விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் செம்மையானவையெனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும், இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையற்றவை அல்லது செம்மையற்றவையெனத் தேர்வுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பத் தகைமை அற்றுவிடும் எனவும், தேர்வுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் இழப்புப் பணக்கொடுப்பனவு எதுவுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவேனெனவும் நான் அறிந்திருக்கின்றேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

அபேட்சகர் அரசாங்க சேவையிலுள்ளவரெனின், திணைக்களத் தலைவரின் அறிக்கை.

————,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

தேதி :————.

8-604—17-08-73 ந். திகதிய வர்த்தமானி இல. 73

**கல்வி அமைச்சு**

உலோக வேலை/மரவேலை/தொழில்நுட்ப வரைதல்/மோட்டார் தொழில்நுட்ப/மின்சாரத் தொழில்/கட்டடத் தொழில் சிரேட்ட போதனாசிரியர் பதவிகள்

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் உலோக வேலை/மரவேலை/தொழில்நுட்ப வரைதல்/மோட்டார் தொழில்நுட்ப/மின்சாரத் தொழில்/கட்டடத் தொழில், சிரேட்ட போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயர் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்காவிடின் அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு தமது சம்பளத்தில் 6% த்தைச் செலுத்த வேண்டும். இதற்கு அரசாங்கத்தின் உதவு தொகை 9% ஆகும். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை ஏற்கனவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் உபகாரச் சம்பளத்துக்கான அவரது உரிமைகள் பாதுகாக்கப்படும். புதிதாகச் சேர்க்கப்படுபவர்களைப் பொறுத்தளவில் அவர்களின் நியமனம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையிலும், நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவியை ஏற்கனவே வகிப்பவர்களைப் பொறுத்தளவில் அவர்களின் நியமனம் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை முறையிலும் அமையும்.

3. **தகவுத்திறன்.**—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமை உடையரெனத் திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(i) 7.9.1973 அன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) சிறந்த ஒழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) பின்வரும் கல்வித் தகைமைகளுள் யாதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) சி. பா. த. பத்திரம் ;

(ஆ) க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்கள/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி ;

(இ) சமனான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி.

(iv) போதிய செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு வகையினதான அனுபவம் (கீழேயுள்ள 5 ஆம் பந்தியைப் பார்க்கவும்).

(v) சிங்களத்தில் கற்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் கற்பித்தற்கான தேர்ச்சி பெறவேண்டும்.

4. **உயர்தொழில் தகைமைகள்.**—வெவ்வேறு துறைக்குமமையும் கீழ்க்காணும் தகைமைகளை, விண்ணப்பிக்கும் பதவிக்கமைய விண்ணப்பதாரி பெற்றிருக்க வேண்டும் :—

(i) **உலோக வேலை.**—பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் யாதேனும் ஒன்றையேனும் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பொறிமுறை, மின்சார எந்திரவியல்) சான்றிதழ் ;

(ஆ) கல்லோயா அபிவிருத்திச் சபை தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் தகுதித்தேர்வு (பொறிமுறை எந்திரவியல்) சான்றிதழ் ;

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால், மூன்று வருட மாலை நேரப் பயிற்சியின் பின் வழங்கப்படும் எந்திரவியல் சான்றிதழ் ;

(ஈ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் பொறிக்கள எந்திரவியலில் வழங்கப்படும் இறுதிச் சான்றிதழ் ;

(உ) சமமான அல்லது உயர்ந்த உயர்தொழில் தகைமைகள்.

(ii) **மரவேலை.**—பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் யாதேனும் ஒன்றையேனும் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் மரவேலையிலும் மூட்டுதலிலும் வழங்கப்படும் இறுதிச் சான்றிதழ் ;

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பொறிமுறை, மின்சார எந்திரவியல்) சான்றிதழ் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் மாலைநேரப் பயிற்சியின் பின் வழங்கப்படும் எந்திரவியல் சான்றிதழ் ;

(இ) கல்லோயா அபிவிருத்திச் சபை தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் தகுதித் தேர்வு (பொறிமுறை எந்திரவியல்) சான்றிதழ் ;

(ஈ) சமமான தொழில்நுட்பக் கல்வித் தகைமைகள்.

(iii) **தொழில்நுட்ப வரைதல்.**—பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் யாதேனும் ஒன்றையேனும் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் பொறிக்கள எந்திரவியலில் அல்லது தச்சுவேலையிலும் மூட்டு வேலையிலும் வழங்கப்படும் இறுதிச் சான்றிதழ் ;

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் மாலைநேரப் பயிற்சியின் பின் வழங்கப்படும் எந்திரவியல் சான்றிதழ் அல்லது கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சார, பொறிமுறை எந்திரவியல்) சான்றிதழ் ;

(இ) கல்லோயா அபிவிருத்திச் சபை தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் தகுதித் தேர்வுச் சான்றிதழ் ;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இடைமானி விஞ்ஞான (எந்திரவியல்) சான்றிதழ் ;

(உ) சமமான தொழில்நுட்பக் கல்வித் தகைமைகள்.

(iv) மோட்டார் தொழில்நுட்பம்.—பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் யாதேனும் ஒன்றையேனும் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் வழங்கப்படும் மோட்டார் வாகன நுண்தொழிலாளர் அல்லது மோட்டார் வாகன மின்சாரத் தொழிலாளர் அல்லது மோட்டார் வாகனப் பொறியாளர் இறுதிச் சான்றிதழ் ;

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சார, பொறிமுறை எந்திரவியல்) சான்றிதழ் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் மாலைநேரப் பயிற்சியின் பின் வழங்கப்படும் எந்திரவியல் சான்றிதழ் ;

(இ) கல்லோயா அபிவிருத்திச் சபை தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் தகுதித் தேர்வு (பொறிமுறை எந்திரவியல்) சான்றிதழ் ;

(ஈ) சமமான தொழில்நுட்பத் தகைமைகள்.

(v) மின்சாரத் தொழில்கள்.—பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் யாதேனும் ஒன்றையேனும் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் அல்லது இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரியால் அல்லது ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சார, பொறிமுறை எந்திரவியல்) சான்றிதழ் ;

(ஆ) அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தால் வழங்கப்படும் மின்சார எந்திரவியல் சான்றிதழ் ;

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் மூன்று வருட மாலைநேரப் பயிற்சியின் பின் வழங்கப்படும் எந்திரவியல் சான்றிதழ் ;

(ஈ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் மின்சார தொழில்களில் வழங்கப்படும் நுண்தொழிலாளர் மட்டத்திலான சான்றிதழ் ;

(உ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் மின்சாரத் தொழில்களில் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் பூரண சான்றிதழ் ;

(ஊ) சமமான அல்லது உயர்ந்த உயர்தொழில் தகைமைகள்.

(vi) கட்டடத் தொழில்கள்.—பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் யாதேனும் ஒன்றையேனும் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் வழங்கப்படும் கட்டட நுண்தொழிலாளர் சான்றிதழ் ;

(ஆ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் செங்கல் அடுக்குதலிலும் சாந்து பூசுவதிலும் வழங்கப்படும் இறுதிச் சான்றிதழ் ;

(இ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் கட்டடத் தொழில்களில் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் பூரண சான்றிதழ் ;

(ஈ) கல்வி அமைச்சின் தொழில்நுட்ப நிலையங்களால் வழங்கப்படும் கனிட்ட நுண்தொழில் உத்தியோகத்தர் (குடிசார் எந்திரவியல்) சான்றிதழ் அல்லது நுண்தொழிலாளர் (குடிசார் எந்திரவியல்) சான்றிதழ் ;

(உ) அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தால் வழங்கப்படும் குடிசார் எந்திரவியல் தகுதித் தேர்வுச் சான்றிதழ் ;

(ஊ) கல்வி அமைச்சின் தொழில்நுட்ப நிலையங்களால் மாலைநேரப் பயிற்சியின் பின் வழங்கப்படும் கட்டட அமைப்புச் சான்றிதழ் ;

(எ) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

குறிப்பு.—தொழில்நுட்ப நிலையங்களில் ஏற்கனவே போதனாசிரியர்களாக நியமனங்கள் வகிப்பவர்களுக்கு, மேற்குறித்த தகைமைகளை அவர்கள் பெற்றித்தற்கமைய, முன்னுரிமை வழங்கப்படும்.

5. சம்பள அளவுத் திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 6,600—180/8—240/2—360/7—11,040 ஆகும். 10 வருடத்துக்குக் குறைந்த அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரி ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, வேண்டிய அனுபவத்தைப் பெறும்வரை பதில் கடமை புரிபவராக திரட்டிய மாறுத வருடாந்தச் சம்பளம் ரூ. 6,600 உடன் நியமிக்கப்படுவார். (1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—ரூ. 3,900—180/9—360/8—8,400).

6. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள். (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை).

8. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவை எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் Iம் பகுதி (IIஅ) ம் தொகுதியில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடர் எண் : பொ. நி./3/437.
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந் உ.

விண்ணப்ப மாதிரிப் படிவம்

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

**கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் சிரேட்ட போதனாசிரியர் பதவி**

1. பெயர் (முதலெழுத்துகளுடன்) : திரு/திருமதி/செல்வி : ————.

2. முழுப்பெயர் : ————.

3. உத்தியோக முகவரி : ————.

4. சொந்த முகவரி : ————.

5. (அ) இலங்கையரா ? : ————.
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? : ————.

6. பிறந்த திகதி :— வருடம் : ————, மாதம் : ————, நாள் : ————.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :—
   வருடம் : ————, மாதம் : ————, நாள் : ————.

8. தற்போதைய பதவிபற்றிய விபரங்கள் :—
   (அ) பதவி : ————.
   (ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? : ————.
   (இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? : ————.
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? : ————.
   (உ) திணைக்களம் : ————.
   (ஊ) நிலையம்/வேலை இடம் : ————.
   (எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————.
   (ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி : ————.

9. கல்வித் தகைமைகள்பற்றிய விபரங்கள் :—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள்பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. தொழில்நுட்ப/உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? : ————.
(அங்ஙனமாயின், விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

திகதி : ————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

8-773—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

## சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

### பெரும்பாக விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் பதவி

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தில் பெரும்பாக விஸ்தரிப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் செயலாளர், தோட்டத் தொழிற் துறைகள் அமைச்சு, த. பெ. இல. 1652, கொழும்பு 1, என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**குறிப்பு.**—(i) கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்,

(ii) விண்ணப்பப்படிவம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையற்றதுமாகும். அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவு தொகை செலுத்தப்பட வேண்டும். ஆரம்பகால சேவை மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் கீழ் 1972 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதிக்கு முன்னர் நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையுள்ள பதவியை வகித்தவராயும் இருந்தால் ஆரம்பகாலத்தில் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற நியமிக்கப்படுவார்.

**3. சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம் பின்வருமாறு : திரட்டிய சம்பளம்—வருடத்திற்கு ரூபா 6,720—12 × 360 உம் 11 × 480 சம்பள உயர்வுகளைக் கொண்ட வருடத்திற்கு ரூ. 16,320 (ரூபா 11,520 சம்பளத்திலும், ரூபா 14,880 சம்பளத்திலும் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு).

**குறிப்பு.**—விதிக்கப்பட்ட பின்னிலைப்பட்டத்தைப் பெற்றாலன்றி எந்த உத்தியோகத்தரும் வருடாந்தம் ரூபா 11,520 ற்கு மேல் சம்பளம் பெறுதற்கு உரித்துடையவரல்லர்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) (i) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மொன்றில் விவசாயத்தில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றவராயும்,

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாயத்தில் பின்னிலைப்பட்டதாரிப் பட்டம் பெற்றவராயும்,

அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் தாவரவியல், இரசாயனவியல் ஆகியவற்றுடன் கூடிய முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு விஞ்ஞானப் பட்டதாரியாயும் அல்லது அதற்குச் சமமான தகைமை உடையவராயும்,

அல்லது

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் விவசாயத்தில் பொதுப்பட்டம் பெற்றவராய் அல்லது தாவரவியல், இரசாயனவியல் ஆகியவற்றுடன் கூடிய விஞ்ஞானப் பட்டம் பெற்றவராய் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் 5 வருட திருப்திகரமான சேவையையும், விவசாயத் திணைக்களத்தின் சிரேஷ்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்தும் தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டவராகவும்,

அல்லது

(ii) விவசாயத் திணைக்களத்தின் சிரேஷ்ட திணைக்களப் பரீட்சையில் சித்தி பெற்ற விசேட தரத்தில் அல்லது I ந் தரத்தில் உள்ள, விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த விவசாயப் போதனாசிரியராகவும்,

அல்லது

(iii) சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தின் விசேட தரத்தில் அல்லது முதலாம் தரத்தில் உள்ள ஒரு விசாலிப்பு உத்தியோகத்தர்,

அல்லது

(iv) விவசாயத் திணைக்களத்திற் சிரேஷ்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்தவரும் தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டவருமான பண்ணைக் கண்காணிப்பாளர்,

அல்லது

(v) சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தில் 3 வருட திருப்திகரமான சேவையையுடையவரும் தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டவருமான பண்ணை முகாமையாளராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(i) விவசாயத்தில் நடைமுறைப் பயிற்சி உடையவர்கள்,

(ii) பயிர்வளர்ப்பில் அல்லது இயற்கைப் பட்டுவளர்ப்பில் அனுபவம் உடையவர்கள்,

(iii) அரச திணைக்களத்தில் அல்லது விஞ்ஞான நிறுவனத்தில் நிர்வாக அனுபவமுடையவர்கள் ,

ஆகிய விண்ணப்பதாரிகளுக்கு சலுகை காட்டப்படும்.

(ஆ) விண்ணப்ப முடிவுத் தேதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் ; பின்னிலைப் பட்டத் தகைமை பெற்ற விண்ணப்பதாரரின் ஆகக் கூடிய வயதெல்லை 35 ஆகும். (அரச சேவைகளிலுள்ள அபேட்சகர்களுக்கு இந்த வயதெல்லைகள் ஏற்புடையனவாகா).

(இ) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராயுமிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கப்படும் பொழுது சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்களோ அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கத்திற்கு அமைய வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றிதழ்கள். இவற்றுள் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற் தகைமைக்கான சான்றிதழும் அல்லது தொழில் நுட்பத் தகைமைக்கான சான்றிதழும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த உயர் தகைமைச் சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—(i) சாதனங்கள் எவையும் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அல்லது அரசாங்க யாக்கங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் தலைவர்களுக் கூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களோ அல்லது அவை சம்பந்தமாக கடிதத் தொடர்புகளோ தோட்டத் தொழில் துறைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இவ்வமைச்சில் உள்ள எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் I ம் பகுதி (IIஅ) ம் தொகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

டொறிக் த சூஸா,
செயலாளர்,
தோட்டத் தொழிற் துறைகள் அமைச்சு.

தோட்டத் தொழில் துறைகள் அமைச்சின் அலுவலகம்,
த. பெ. இலக்கம் 1652,
6, சேர் பாரன் ஜயத்திலக்க மாவத்தை,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 6 ந் உ.

விண்ணப்ப மாதிரிப் படிவம்

**பெரும்பாக விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் பதவி—சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்**

(சாதனங்களையோ சாதனங்களின் பிரதிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தலாகாது)

1. முழுப்பெயர் (உறுப்பெழுத்தில்) : ————.

2. அஞ்சல் முகவரி (அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்) : ————.

3. பிறந்த தேதி :—
வருடம் : ————, மாதம் : ————, தேதி : ————

4. நீர் இலங்கைப் பிரசையா ? : ————.
(வம்சாவழி அல்லது பதிவுப் பிரசையா என்று குறிப்பிடுக)

5. பிறந்த இடம் : —.
(குறிப்பு இல. (2) பார்க்குக)
(அ) விண்ணப்பதாரர் : ————.
(ஆ) தகப்பன் : ————.
(இ) தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) தகப்பன் வழிப் பூட்டன் : ————.

6. (அ) ஆணா, பெண்ணா ? : ————.
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் : ————.

7. (1) சிங்களம், (2) ஆங்கிலம் சித்தி அடைந்த ஆகக்கூடிய பரீட்சை : ————.

8. 12 ஆம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறும் கல்வித் தாபனங்கள் :—

| | பொதுக் கல்வி | | உத்தியோகக் கல்வி | |
|---|---|---|---|---|
| | பாடசாலை அல்லது கல்லூரி | தொட்டு—முடிய | கல்வித் தாபனம் | தொட்டு—முடிய |
| (1) | | | | |
| (2) | | | | |
| (3) | | | | |
| (4) | | | | |
| (5) | | | | |

9. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புகளின் அளவு என்ன ? : ————.

10. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்றப்பாதகத்திற்குக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கிலக்கத்தை எடுத்துக் காட்டித் தேதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக : ————.

11. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் : ————.
(பல்கலைக் கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வி/அல்லது நுண்தொழிற் கல்வித் தகைமைகள் முதலிய வற்றின் விபரங்களைத் தேதி, சித்தித் தரம் இருந்தால் அவை, எடுத்த பாடங்கள் கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக)

12. இப்போதைய தொழிலும் முன்னர் ஏதேனும் பதவியில் இருந்தால் அப்பதவிகளும் : ————.

(பதவி ஏற்றுக்கொண்ட தேதியும் விட்டு நீங்கிய தேதியும் கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்பட வேண்டும்)

**முக்கியம்.**—அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் இீழேயுள்ள 13 ஆம் நிரப்பு பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்.

| பதவி | தொட்டு முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |
| (6) | | |
| (7) | | |
| (8) | | |

13. மேலும் வேறு விபரங்கள் : ————.

14. தங்களைப் பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய தங்களுக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக : ————.

(i) ————.

(ii) ————.

15. இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை யென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப் படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி : ————.

8-700—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

### நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு

### ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பில் வேலை மேற்பார்வையாளர் பதவிகள்—வகுப்பு III

ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பில் வேலை மேற்பார்வையாளர் வகுப்பு III பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழ்க்காணப்படும் மாதிரிப் படிவத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் என்னைச் சேருமாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் ஆண்டொன்றுக்கு ரூபா 3,000—90×11—3,990 ஆகும்.

குறிப்பு.—இவ்வறிவித்தலின் பந்தி 4 (ஆ) இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப நிலையில், அவர்கள் வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்துச் சோதனையொன்றில் சித்தியடைந்து நியமனம் பெறும்வரை வைக்கப்படுவர்.

3. சேவை நிபந்தனைகள்.—பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியமற்றவையுமாகும். அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் 3 வருட பரீட்சைக்காலம்/தகுதிகாண் காலமொன்றிற்கு உட்படுதல் வேண்டும்.

இவ்வறிக்கையின் பந்தி 4 (ஆ) இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் ஒரு வருட பயிற்சிநெறியொன்றை மேற்கொண்டு, பரீட்சையொன்றில் சித்தியடைதலும் வேண்டும்.

4. தகைமைகள்.—(அ) (i) வயது : 17, செப்டம்பர் மாதம் 1973 ஆம் திகதியன்று 18—30 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆ. சி. பொ. அ. இல் வேலை செய்பவர்களுக்கு இம்மேல் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

(ii) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவகமொன்றில் இரு வருடகால நெறியொன்றினை மேற்கொண்ட பின்னர் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றிலிருந்து பிறசமனை அல்லது உயர் தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) (i) பொதுக் கல்வித் தராதரப் பத்திர சாதாரண பரீட்சையில் பௌதிகம், இரசாயனம், தூய கணிதம் அல்லது பிரயோக கணிதம் ஆகியவற்றில் இரு சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பில் வேலை பார்ப்பவராக இருத்தல் வேண்டும்.

சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த திடகாத்திரமுள்ளவர்களாயும் சிறந்த குணநலமுடையவர்களாயும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள்.—விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்ட மாதிரிப் படிவத்திற்கமையத் தயாரிக்கப்பட்டு பதிவுக் கடிதம் மூலம் 17, செப்டம்பர் 1973 ஆம் திகதியிலன்று அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். சேவையிலுள்ளவர்களது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவர்களூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வேலை மேற்பார்வையாளர் பதவிகள்—வகுப்பு III" என குறித்தல் வேண்டும்.

பின்வரும் சாதனங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ்

(2) கல்விச் சான்றிதழ்கள்

(3) அண்மையில் பெறப்பட்ட குணச்சான்றிதழ்கள் மூன்று.

மேலேயுள்ள அறிவுறுத்தல்களுக்கமையத் தயாரிக்கப்பட்டிராத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எம். சந்திரசேன,
செயலாளர்.

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு,
அ. பெ. இல. 512,
கொழும்பு 1,
8, ஓகஸ்ட் 1973.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

வேலை மேற்பார்வையாளர்கள் வகுப்பு III, பதவிகளுக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.
2. முகவரி :————.
3. (i) பிறந்த திகதியும் இடமும் :————.
   (ii) வருடம் :———— மாதம் :———— தேதி ———— இடம் :————.
4. சாதியம் :————.
5. திருமணமானவரா அல்லது தனிநபரா ? :————.
6. (i) கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பாடங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்) :————.
   (ii) தொழிநுட்பத் தகைமைகள் :————.
7. தற்போதைய பதவி (பதவி வகிப்பின்) நிரந்தரமா/தற்காலிகமா/அமயமா :————.
8. பாடசாலையிலிருந்து விலகிய பின்னர் பார்த்த வேலை அல்லது பெற்ற பயிற்சி பற்றிய விபரங்கள் (திகதிகளுடன்) :————.
9. முன்பு யாதாவது அரசாங்கத் திணைக்களத்திலோ/கூட்டுத்தாபனத்திலோ தொழிலாற்றியிருப்பின் விலகியதற்கான காரணத்தைக் காட்டுக :————.
10. எப்போதாவது சட்டநீதிமன்றமொன்றில் யாதாவது குற்றவியற்றவறுக்கான தீர்ப்புக்காளாகியிருப்பின் குற்றத்தினதும் தண்டனையினதும் விபரங்களைத் தருக :————.
11. நற்சாட்சிப் பத்திரங்கள் தரும் மூவரின் பெயர்களும், பதவிப்பெயர்களும் :————.
12. இவ்விண்ணப்பத்தில் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் இத்தால் நான் உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையெனக் காணப்படின் அது தெரிவுக்கு முன்னராயின் நான் தகுதியற்றவனுக்கப்படுவதற்கும், தவறு நியமனத்திற்குப் பின்னர் கண்டு பிடிக்கப்படின் நான் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் பாத்திரராவேன் என்பதனையும் நானறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————.

#### திணைக்களத் தலைவரது சான்றிதழ்

(ஏற்கனவே சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு)

பந்திகள் 7, 8 இல் தரப்பட்டுள்ள விபரங்கள் இவ்வலுவலகத்தில் காணப்படும் பதிவேடுகளின்படி சரியானவையாகும்.

விண்ணப்பம் சிபாரிசு செய்யப்படுகின்றது/சிபாரிசு செய்யப்படவில்லை.

————,
திணைக்களத் தலைவர்.

திகதி :————.

S.777—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

இல : வெ.மு./3/512

### கல்வி அமைச்சு

ஜேர்மனிய ஜனநாயகக் குடியரசுப் புலமைப் பரிசில்கள்—1973 ஆம் ஆண்டு

ஜேர்மனிய ஜனநாயகக் குடியரசிலுள்ள பல்கலைக் கழகங்களில் பட்டமுன் கற்கைகளுக்கும் (தொழில் நுட்பமட்ட) கல்லூரிகளில் கற்கைகளுக்கும் பின்வரும் துறைகளில் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) ஆடைவகை எந்திரவியல்
(2) விவசாயம்
(3) புவிவரலாற்றியல்
(4) வனவியல்

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்த பின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்க்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினதும் விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2.—கால எல்லை.—பட்டமுன் கற்கைப் புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 6 வருட கால அளவினவாகவும் கல்லூரிப் புலமைப் பரிசில்கள் 4 வருட கால அளவினவாகவும் அமையும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஜேர்மனிய ஜனநாயகக் குடியரசு அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நோத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) ஸ்ரீ லங்கா பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.9.1973 அன்று 18—25 வயதிடையினராக இருக்க வேண்டும்.

(iii) சகல அபேட்சகர்களும் (இவ்விரண்டில் எதற்கு விண்ணப்பிப்பவரும்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் குறைந்த பட்சம் மூன்றில் க. பொ. த. (உயர) பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

பௌதிகவியல், இரசாயனவியல், தூயகணிதம், பிரயோக கணிதம், அல்லது

களிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் தராதரப் பத்திரப் பரீட்சையை, அல்லது

தேசிய தொழில்நுட்பவியல் தகுதித் தேர்வுப் பத்திரப் பரீட்சையை. அல்லது

ஊாடி சிரேட்ட தொழில்நுட்பநிலையத் தகுதித் தேர்வுப் பத்திரப் பரீட்சையை திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும், அல்லது

சமமான தகைமை பெற்றிருக்க வேண்டும்.

(iv) சகல அபேட்சகர்களும் ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(v) கல்லூரிகளிலான கற்கைகளுக்கு விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் யாவரும் ஜேர்மனிய மொழி அறிவு பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—(1) ஜேர்மனிய மொழி அறிவு பெற்றுள்ள வரும் மேலுள்ள (i) தொடக்கம் (iv) வரையுள்ள நிபந்தனைகளுக்கமையத் தகுதியுடையவருமான அபேட்சகர் ஒருவர் பட்டமுன் கற்கைப் புலமைப் பரிசில் வழங்கப்படுதற்குச் சீர்தூக்கப்படுவார்.

(2) எனவே அபேட்சகர்கள் யாவரும் ஜேர்மனிய மொழியில் தாம் பெற்றுள்ள திறமை பற்றி விண்ணப்பப் படிவத்தின் 24 ஆம் கூட்டில் குறிப்பிட வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரி

வதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.1973 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15(ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

பிரயாணம் சம்பந்தமான சகல செலவுகளும் கற்கைச் செலவுகளும்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஜெ. ஜ. குடியரசுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக ஸ்ரீ லங்கா குடியரசுக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழு செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) ஸ்ரீ லங்கா குடியரசுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஜெ. ஜ. குடியரசில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெற்றபாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.8.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973.8.3.

8-690—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனைப் பிரிவுக்கு பிறப்பு இறப்புப் பதிவாளர் பதவி

மேற்கூறப்பட்ட பதவிக்கு மருதமுனைப் பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலமாக வசிப்பவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப் படக்கூடியவர்கள், ஆண்/பெண் இருபாலரும், விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராமசேவையாளர் அலுவலகங்களிலும் இப் பிரிவை உள்ளடக்கும் உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிசு நிலையம், சனசமூக நிலையங்களிலும் ஏனைய பகிரங்க நிலையங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிற அறிவித்தல்களில் அடங்கி உள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு 1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

சோமசிறி முனசிங்க,
மேலதிக மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
அம்பாறை,
4.8.73.

8-743—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

### நிருவாகக் கல்விக் கழகம்

### பயிற்சி ஆராய்ச்சிக் கூட்டுறுப்பினர் பதவிகள்

நிருவாகக் கல்விக் கழகத்தில் பயிற்சி ஆராய்ச்சிக் கூட்டுறுப்பினர் பதவியின் வெற்றிடங்களுக்கு இலங்கை நிருவாக சேவை, இலங்கை எந்திரவியற் சேவை, அரசாங்க கணக்காளர் சேவை ஆகிய சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இவ் வெற்றிடங்கள் ஆளணிமுகாமை, அலுவலக முகாமை, அளவறி தொழில் நுணுக்கம், தொழிற் கல்வி, நிதி முகாமை ஆகிய துறைகளிலாகும்.

2. பயிற்சி ஆராய்ச்சிக் கூட்டுறுப்பினரின் வேலை அரசசேவையின் செயல்களில் முன்னேற்றத்தை அடையும் நோக்கத்திற்காக கல்வித் தொழிலும் சாதனைச் செய்கையையும் இணைக்கப்பட்டதாயிருக்கும்.

சம்பந்தப்பட்ட வேலை பின்வருவனவற்றை உள்ளடக்கும் :—

(அ) பயிற்சித் தேவைகளை அடையாளம் காணலும் மதிப்பிடுதலும்.

(ஆ) பயிற்சிச் செயல்முறைகளை அமைத்தலும், மதிப்பிடலும் அவற்றில் ஈடுபடலும்.

(இ) ஒதுக்கப்பட்ட துறைகளில் பயிற்சிக்குரிய பொருட்களை அபிவிருத்தி செயல்.

(ஈ) வெளியீட்டுக்கான பொருட்களைத் தயாரித்தல்.

(உ) பிற அரச நிறுவகங்களுக்கு அவற்றின் பயிற்சி நிகழ்ச்சியமைப்புக்களை நடாத்துவதற்கு உதவுதல்.

(ஊ) முகாமை அபிவிருத்தி சம்பந்தமாக ஆராய்ச்சி செய்தல், ஆலோசனை செய்தல், ஒதுக்கப்பட்ட பிற வேலைகளைப் பூர்த்திசெய்தல்.

3. கீழே கொடுக்கப்பட்ட 2 திட்டங்களின் கீழ் விண்ணப்பங்கள் கருதப்படும்.

திட்டம் (i) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் கழகத்திற்கு ஒரு வருட காலத்திற்கு இணைக்கப்பட்டிருப்பார். ஒரு உத்தியோகத்தர் இணைக்கப்பட்டகாலம் முடிவடைந்த பின்னர் தமது கணிசமான பதவிக்கு, மூது முறையில் அல்லது சேவையில் நன்மை பயக்கும் விடயங்களில் இழப்பு இல்லாமல் திரும்பச் சென்று கடமைகளை ஏற்கலாம்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் கழகத்தில் பணியாளராக நீண்டகாலத்திற்குச் சேவை செய்ய வேண்டும். இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தர் வெளிநாடுகளுக்கு பயிற்சிக்கு அனுப்பப்படாதவராக இருப்பின் தாம் விரும்பின் நியாயமான முன்னறிவித்தல் கொடுப்பின் ஒரு வருட காலத்திற்குப்பின் விடுவிக்கப்படலாம். விசேட பட்டதாரிப் பயிற்சி நெறியில் பயிற்சிக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டால் அவர் திருப்பி வந்ததும், அரசாங்கத்திற்கு கட்டாயமாகச் சேவைசெய்ய வேண்டிய காலத்திற்குப் புறம்பாக 5 வருட காலத்திற்குச் சேவை புரிய ஒப்பந்தம் செய்ய வேண்டியவராவார்.

**தகைமைகள்.—விண்ணப்பதாரிகள்—**

(அ) 73.08.10 ஆந் திகதியில் 45 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை நிருவாக சேவை, இலங்கை எந்திரவியற் சேவை, அரசாங்க கணக்காளர் சேவை ஆகிய சேவைகளில் குறைந்தது 10 வருட சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும், அல்லது
உயர் தொழிற்குரிய தகைமைகள் பெற்று அச்சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட அங்கத்தவராயிருத்தல் வேண்டும்.

(இ) சிங்களத்தில் அதிக தேர்ச்சியுடையவராகவும், அம்மொழியில் கற்பிக்கத் தகுதியுடையவராகவுமிருத்தல் வேண்டும்.

5. வேதனம்.—தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் பயிற்சி ஆராய்ச்சிக் கூட்டுறுப்பினர்களாக திறமையாகக் கடமைபுரியும் காலந் தொடக்கம், அவர்களுடைய கணிசமான பதவியின் வேதனத்தோடு வருடமொன்றுக்கு ரூபா 2,400/- விற்கு மேற்பட்டாத படியும் சேர்க்கப்படும்.

6. கீழே கொடுக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளரை 73.08.31 தேதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ சென்றடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பயிற்சி ஆராய்ச்சிக் கூட்டுறுப்பினர்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
ஓகத்து 6, 1973.

### விண்ணப்பப் படிவம்

1. பெயர், திரு/திருமதி/செல்வி :————.
(சொந்தப் பெயர் முதலில்)

2. பிறந்த திகதி :————.

3. விண்ணப்பதாரிக்குரிய சேவை :————.

4. அச் சேவையிற் சேர்ந்த திகதி :————.

5. தற்போதைய (அ) வகுப்பு/தரம் :————.
(ஆ) வேதனம் :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. உயர் தொழிற்றகைமைகள் :————.

8. தொழிற் பதிவு திகதிகளுடன் (தற்போதைய பதவி தொடக்கம்) :————.

9. சிங்களத்திற் தேர்ச்சிபெற்ற உயர் பரீட்சை :————.

10. முன்னைய கல்வி கற்பிக்கும் அனுபவம், யாதேனும் உண்டாயின் :————.

11. ஆராய்ச்சிக்காற்றிய தொண்டும், வெளியீடுகளும் :————.

12. இலங்கையிலும் வெளிநாட்டிலும் பயின்ற பயிற்சி நிகழ்ச்சியமைப்புக்கள் :————.

13. மாநாடுகள்/ஆய்வகுப்புக்கள் முதலியன. இலங்கையிலும் வெளிநாட்டிலும் பங்குபற்றியவை :————.

14. (அ) எத்திட்டத்தின் கீழ் நீர் கருதப்படுவதற்கு விரும்புகின்றீர் :————.

(அறிவித்தலின் 3 ஆம் பந்தியைப் பார்க்க)

(அ)

(ஆ) எந்த விசேட துறைக்கு (அறிவித்தலின் 1 ஆம் பந்தியைப் பார்க்க) கருதப்பட விரும்புகின்றீர் எனவும் குறிப்பிடுக.

(ஆ)

————,
கையொப்பம்.

திகதி :————.

### திணைக்களத் தலைவரின் விதப்புரை

————,
ஒப்பமும் பதவிப் பெயரும்.

திகதி :————.

8-763—17.08.73 ந் திகதி வர்த்தமானி இல. 73

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

ஆசிரியர்களாகப் பயிற்சி அளித்தற்கான தெரிவு—விசேட பயிற்சி நெறிகள்—1974 ஆம் ஆண்டு

மேற்குறித்த பயிற்சி நெறிகள் பற்றி 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆந் திகதிய 70 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கான திருத்தம்.

(ஆ) விசேட பிரிவின் "ஈ" ஆம் உட்பிரிவில் கைப்பணிகள் பயிற்சி நெறிக்கான தகவுத்திறன் (i), (ii) என இரு வகைப்பட்ட வகுதிகளைக் குறிக்கிறது.

(i) ஆம் உபபிரிவில் 'ஆண்களுக்கு' என்னும் சொல் 'பொறிமுறை பயிற்சி நெறிக்கு' என மாற்றப்பட வேண்டும்.

(ii) ஆம் உபபிரிவில் 'பெண்களுக்கு' என்னும் சொல் 'கலை, கைப்பணிப் பயிற்சி நெறிக்கு' என மாற்றப்பட வேண்டும்.

இதன் பிரகாரம் இந்த இரு பயிற்சி நெறிகளுக்கும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

கைப்பணிகள் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் மாத்திரம் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆந் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பி. உடகம,
மகா வித்தியாதிபதி.

கல்வி அமைச்சு,
கொழும்பு 2,
1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ஆந் திகதி.

8-805—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால்** ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.